நறறுணையாவது நமசிவாயவே

## திருக்கேதீச்சரம்

# திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள்

## இந்து கலாசார மண்டபத்தின் தொடர் பணிகள்











தொகுப்பு

"கலாபூஷணம்" தம்பு துரைராசா

25.01.2019

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றுணையாவது நமசிவாயவே

# திருக்கேதீச்சரம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாசார மண்டபத்தின் தொடர் பணிகள்



**பதிப்பு அனுசரணை**

**விடைக்கொடிச் செல்வர். சின்னத்துரை தனபாலா**

பிரதித்தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்.


தலைவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை

**தொகுப்பு**

**கலாபூஷணம் தம்பு துரைராசா**

**25.01.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சுவாமிகளின் குருபூசை தினம் 25.தை 2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## இரண்டாவது குருமகா சந்நிதானம் நல்லை ஆதீனம் யாழ்ப்பாணம்

திருக்கேதீஸ்வரம் ஸ்ரீமத் சபாரெத்தினம் சுவாமிகளின் தொண்டர் சபையினூடாக சுவாமி அவர்களின் வருடாந்த குருபூசை திருக்கேதீஸ்வர ஆலய சூழலில் இடம்பெறுவதையிட்டும், அச்சபையினரால் ஆற்றப்படும் சமூக நலத் திட்டங்களையும் அதற்கு உந்து சக்தியாக விளங்கும் திரு.தம்பு துரைராசாவின் சேவையையும் போற்றி ஆசி கூறி அமைகின்றேன்

என்றும் வேண்டும் இன்ப அன்பு

*நல்லை ஆதீன முதல்வர்*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No.28 of 1981 Of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
CHINMAYA PRAGATI : NO.32, 10TH LANE, OFF SCHOFIELD PLACE, COLOMBO 03, SRI LANKA. TEL : +94 11 259 1344
web:www.chinmayalanka.org email.:info@chinmayalanka.org

''திருவாசகத்துக்கு உருகாதார்
ஒரு வாசகத்துக்கும் உருகார்''

இலங்கையில் உள்ள பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரத்தில் நீண்டகாலமாக தனது ஆன்மீக பணியைச் செய்வதுடன் அடியார்களின் களை தீர்க்கும் பணியையும் ஆற்றி வந்த திருவாசக சுவாமி எனப் பலராலும் போற்றப்படும் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் தொண்டர்களால் உருவாக்கப்பட்ட ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாசார மண்டபம் 2013ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டமை சிறப்புக்குரியது. அந்த மண்டபத்தில் ஒவ்வொரு மாதமும் வரும் பூரணை தினங்களில் திருவாசக முற்றோதல் இடம்பெற்று மகேஸ்வர பூஜையுடன் நிறைவடைதல் போற்றுதற்குரியது.


2019 ஜனவரி 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை இம்மண்டபத்தில் சுவாமியின் சமாதி தினத்தை முன்னிட்டு பாதகை பூஜையும் 26ஆம் திகதி சனிக்கிழமை குருபூசையும் நடைபெற உள்ளது. இப்பணிகளை மேற்கொள்ளும் தொண்டர் சபையின் செயலாளராகப் பணியாற்றும் திரு.த.துரைராஜா ஐயா அவர்கள் தனது 95ஆவது வயதிலும் சிறப்பாக இப்பணிகளை மேற்கொள்வது போற்றுதற்குரியது.

துரைராஜா ஐயா அவர்கள் நீண்டகாலம் நலமாக வாழ்ந்து தனது பணிகளைத் தொடரவும் குருபூஜை விழா சிறப்பாக நடைபெறவும் இவ்விழாவை முன்னிட்டு வெளிவரவுள்ள மலர் சிறப்பாக அமையவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல கௌரி அம்பாள் சமேத திருகேதீஸ்வரப் பெருமானையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

*இறைபணியில்*
*சுவாமி சிதாகாசானந்தா*
*சின்மயா மிஷன்*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வாழ்த்துச்செய்தி

திருக்கேதீஸ்வரம் சபாரத்தினம் சுவாமிகள் நினைவாக அவர் ஆரம்பகாலங்களில் திருக்கேதீஸ்வரப் பெருமானை வழிபடவரும் அடியார்களின் பசிப்பிணியுடன் கூடிய அசதியைப் போக்குவதில் பெரும்பங்காற்றிய சுவாமிகளின் நினைவாலயத்தில் இடம்பெறும் குருபூசை நிகழ்வுடன் கூடிய மலர் வெளியீடும் சிறக்கவும் இப்பணிகளை தளராத வயதிலும் மேற்கொண்டு வரும் திரு.தம்பு துரைராசா அவர்களின் சேவையையும் பாராட்டுவதோடு சகல விடயங்களும் சிறக்க சந்நிதியானை வேண்டுதல் செய்து வாழ்த்துகின்றோம்.

சுபம், சாந்தி

*குருபணியில்*
*செ. மோகனதாஸ்*
*சுவாமி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களின் வாழ்த்து

**திரு.தம்பு துரைராசா தம்பதிகளின் 60வது ஆண்டு திருமண நாளில் வழங்கிய வாழ்த்து**

திரு.தம்பு துரைராசா அவர்கள் அனைத்து நற்பணிகளையும் முழுமூச்சுடன் முன்னெடுப்பவர். தேனீயின் முயற்சியும், எறும்பின் சுறுசுறுப்பும் இவரிடம் தோற்றுவிடும். காட்சிக்கு எளியவர் கருதுவதில் வல்லவர் எடுத்த காரியத்தை இனிதே முடிக்கும் திண்மை மிக்கவர்.

''மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்''

என்ற பாடல் திரு.தம்பு துரைராசாவை எண்ணியே எழுந்ததோ என்னவோ, ''அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்!'' என்ற திருக்குறளின் இலக்கியம் என்றும் கூறலாம். இத்தகைய நல்ல பல குணங்களின் உறைவிடமாக திரு.துரைராசா இரத்தினேஸ்வரி தம்பதி இல்லற வாழ்வில் அறுபது ஆண்டு காணும் இந்நாள் பொன்னாள். மனையறத்தை மங்கலமாக்கும் மனையாளுடன் பெற்றோர் கருத்தறிந்து நடக்கும் நன்மக்களுடன் சுற்றமும் நட்பும் சூழ பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு வாழ்ந்து சிறக்குமாறு அம்பிக்கையின் மலர்தாள் பணிந்து வாழ்த்துகின்றேன்.

நலமே தழைக்க அன்புடன்

***வசந்தா வைத்தியநாதன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**Department of Hindu Religious and Cultural Affairs**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ<br>பணிப்பாளர்<br>Director | 011-2552643 | සහකාර අධ්‍යක්ෂ (පාලන)<br>உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)<br>Asst. Director (Admin) | 011-2503740 | පොදු<br>பொது<br>General | 011-2552641 |
| | | | | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2552825 |
| නියෝජ්‍ය අධ්‍යක්ෂ<br>பிரதிப் பணிப்பாளர்<br>Deputy Director | 011-2505403 | සහකාර අධ්‍යක්ෂ (කෝවිල්)<br>உதவிப் பணிப்பாளர் (ஆலயம்)<br>Asst. Director (Temple) | 011-2552642 | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.hindudept.gov.lk |
| ගණකාධිකාරී<br>கணக்காளர்<br>Accountant | 011-2552824 | සහකාර අධ්‍යක්ෂ (අරනෙරි)<br>உதவிப் பணிப்பாளர் (அறநெறி)<br>Asst. Director (Aranery) | 011-2554278 | විද්‍යුත් තැපැල<br>மின் அஞ்சல்<br>E-Mail | hindudir@gmail.com |
| මගේ අංකය<br>எனது இல<br>My No | | | | දිනය<br>திகதி<br>Date | |


## இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

திருக்கேதீஸ்வரம் திருவாசகம் சபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாசார மடத்தின் செயற்பாடுகள் தொடர்பாக வெளிவரும் இந்நூலிற்கு வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சுமார் ௨௫ வருடங்களுக்கு மேலாக பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரத்திற்கு அண்மையில் மடம் அமைத்து நீண்டதூரத்திலிருந்து ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு உரிய வசதிகளை வழங்கிவருவதோடு, ஒவ்வொருமாதமும் பூரணை தினத்தில் திருவாசகமுற்றோதல் மற்றும் அன்னதானம் வழங்கலை செவ்வனே செய்துவருவது பாராட்டற்குரிய விடயமாகும்.

இதன் செயலாளர் கலாபூஷணம் தம்பு துரைராஜா அவர்களின் நிர்வாகத்திலும் அனுசரணையிலும் சமயப்பணிகளோடு சமூகப்பணிகளாக மன்னார் மாவட்டத்திலுள்ள வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்கட்கு தையல் இயந்திரம், நான்கு சக்கர நாற்காலி மற்றும் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி ஆகியவை வழங்கி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

"ஈழத்துச் சிவாலயங்கள்", "மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்", "மானிடவாழ்வின் மகத்துவம்" ஆகிய தொகுப்பு நூல்களை வெளியிட்ட கலாபூஷணம் தம்பு துரைராஜா அவர்களின் வழிகாட்டலில் இம்மடத்தின் பணிகளை சிறப்பித்து விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா அவர்கள் வெளியீடு செய்யும் இந்நூல் மக்களுக்கு மிகுந்த பயனுள்ளதாய் அமைய வாழ்த்துவதோடு திருக்கேதீஸ்வரம் திருவாசகம் சபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாசார மடத்தின் நிர்வாகிகள் அனைவரினதும் பணி சிறக்க எல்லாம் வல்ல திருக்கேதீச்சரப் பெருமானை வேண்டுதல் செய்து வாழ்த்துகின்றேன்.

அ.உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்.

248-1/1, காலி வீதி, கொழும்பு – 04. 248-1/1, ගාලු පාර, කොළඹ - 04. 248-1/1, Galle Road, Colombo -04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபைக்கான வாழ்த்துச் செய்தி


திருவாசகம் என்னும் மணிவாசகத்தின் மகத்துவத்தை தமது ஞான அனுபவத்தினூடாக விளக்கி உபதேசித்துரைக்கும் மிக உயர்ந்த குறிக்கோளுடன் சிவபூமியாம் மன்னார் மாநகரில் திருக்கேதீச்சரத்தில் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் ஞாபகார்த்தமாக இயங்கிவரும் திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையின் தலைவரான திருப்பணித்தவமணி திரு.சி.தியாகராசா (STR) அவர்களின் உன்னதமான தலைமையினாலும் செயலாளராக பணியாற்றும் கலாபூஷணம் தம்பு துரைராசா அவர்களின் ஒத்துழைப்பினாலும் திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் குருபூசையும் திருவடி வழிபாடும் பல வருடங்களாக மிகச் சிறப்பான முறையில் நடாத்தப்பட்டு வருகின்றது என்பது வாழ்த்துதலுக்கும் பாராட்டுதல்களுக்கும் உரிய விடயமாகும். அந்த வகையில் இந்த வருடமும் திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் 31வது குருபூசை நிகழ்வும் திருவடி வழிபாடும் 2019ஆம் ஆண்டு தை மாதம் மிகச்சிறப்பாக நடாத்த உத்தேசித்துள்ளமை போற்றதலுக்கும் வாழ்த்துதலுக்கும் உரிய விடயமாகும்.

திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் தொண்டர் சபையானது திருத்தலத்திற்கு யாத்திரையாக வரும் அடியார்கள் தங்கி நிற்பதற்கு அடிப்படை தேவைகளுடன் கூடிய தங்குமிட வசதிகள், அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்தமையுடன் கதாப்பிரசங்கம், பஜனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள், தியானம், சமய நிகழ்வுகள் என்பன நடாத்துவதற்கு சகல வசதிகளுடன் கூடிய கலாச்சார மண்டபம் ஒன்றினையும் அமைத்து உன்னதமான தொடர் பணிகளை ஆற்றிவருகின்றது. 2007 போர்ச் சூழலிலும் புலம்பெயர் காலத்திலும் இந்த மாபெரும் சிவகைங்கரியம் சாத்தியமாக நிறைவேற காரணகர்த்தாவாக தலைவர் திருப்பணித்தவமணி திரு.சி.தியாகராசா (STR) செயலாளர் கலாபூஷணம் தம்பு துரைராசா, பொருளாளர் வி.பி.மாணிக்கவாசகர் ஆகியோரின் சேவையை நினைவு கூர்ந்து அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் உடல் உள ஆரோக்கியத்துடன் நீடுழி காலம் வாழ எல்லாம் வல்ல கௌரி இணை திருக்கேதீச்சர நாதரின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றேன்.

*வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன்,*
*தலைவர்,*
*இந்து ஆலயங்களின் ஒன்றியம்*
*மன்னார் மாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**2015 இந்து ஆராய்ச்சி மாநாடு,**
**யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில்**
**31.07.2015 - 02.08.2015**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 60ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் இந்து ஆராய்ச்சி மாநாடு

02.07.2015 ஈழநாட்டில் இந்துமத வளர்ச்சியில் மடங்கள்

கலாபூஷணம் தம்பு துரைராசா
திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாச்சார மன்றம்,
திருக்கேதீஸ்வரம்.

இவருக்கு இந்து ஆராய்ச்சி மாநாடு 2015ன் போது நினைவுச் சின்னம் பொதுச் செயலாளர் மு.கதிர்காமநாதன் அவர்களால் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் திருக்கேதீச்சரம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையினால் 20.05.2015 இல் நடாத்தப்பட்ட ஆன்மீகப் பெருவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாண்புமிகு அமைச்சர் உயர்திரு.எம்.சுவாமிநாதன் அவர்களுக்கும் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட இந்தியத் துணைத்தூதர் திரு.ஆ.நடராஜன் அவர்களுக்கும் சிறப்பு அதிதிகளாகக் கலந்து சிறப்பித்த திருவாளர் க.நீலகண்டன்(தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்) மற்றும் சொற்பொழிவாளர்களாகக் கலந்து கொண்ட திருவாளர்கள்

1. சி. தில்லைநடராஜா - செயலாளர், ஆறுமுகநாவலர் சபை கொழும்பு
2. திருமதி பவானி முகுந்தன், இந்து கலாச்சாரத் திணைக்களம்
3. பேராசிரியர் மா.வேதநாதன், யாழ்.பல்கலைக்கழகம்
4. பேராசிரியர் க.நாகேஸ்வரன், சப்பிரகமுவ பல்கலைக்கழகம்
5. தமிழருவி த.சிவகுமாரன், வவுனியா தமிழ்சங்கம்
6. கலாபூஷணம் மாத்தளை வடிவேலன்

ஆகியோருக்கும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய திரு.வே.பொ.மாணிக்கவாசகர் அவர்களுக்கும் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகவை 90 நிறைந்த
# திரு. தம்பு துரைராசா அவர்கள்
# திருவாசகமாய் வாழ்க!



மனிதராகப் பிறப்பது என்பது முக்கியமல்ல. மனிதராக வாழ்வதே முக்கியமானது. அப்படி வாழ்வதற்கு பக்கச் சிறகுகளாய் பாதையை வகுத்துக் கொடுப்பது பக்தி இலக்கியங்களே.

பிறப்பிலே ஆங்கிலேயராகப் பிறந்த ஜி. யு. போப்பை இறக்கும் பொழுது தமிழ் மாணவனாக மாற்றிய பெருமை "திருவாசகம்" என்ற தெய்வத் தமிழையே சாரும். வேதம் மட்கலம். திருவாசகம் பொற்கலம்.

*"பெருந்துறை பழுந்து பேசிய வெள்ளம்*
*முழ்கிய புனிதன் மொழித்தவ சகமே*
*வாசகம் அதற்கு வாச்சியம்*
*தாசகல் அஃதுல்லோர்த் தோணித் தவமே."*

என்பது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தரும் வாக்குமூலம்.

திருவாசகம் உணர்வுகளின் உச்சம். அது பாவங்களின் துறைமுகம். பக்தி வெளிப்பாட்டின் ஊற்று. அதனால்தான் ஊழிப்பெரு வெள்ளத்தில் தனது தன்மையைத் தவிர்ப்பதற்கு இறைவன் தன்திருக்கரம்பட எழுதி வைத்துக் கொண்டதாக மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை கூறுவார். திருவாசகத்தின் பற்பல பெருமைகளுள் ஒன்றாக அமைவது தன்னை உபாசிப்பவரை என்றும் இளமையோடு இருக்கச் செய்வதாகும். அது உண்மையா? ஆம் முற்றிலும் உண்மை. சந்தேகமிருந்தால் பம்பலப்பிட்டி இல. 31A, ஜானகி ஒழுங்கை, திருவாசகத்திற்குள் நுழைந்தால் அகவை 90 நிறைந்த திரு. தம்பு துரைராசா என்ற இளைஞரை சந்திக்கலாம். ஐம்பது வயதிற்குள்ளேயே உடல் தளர்ந்து, நோய்க்கு விருந்தாகும் வாலிபர்கள் வாழ்கின்ற இக்காலத்திலே தொண்ணூறு வயதிலும் தள்ளாத நடையுடனும், தளராத உள்ளத்துடனும் வாழ்கின்ற இப்பெரியவர் ஓர் ஆச்சரியக் குறியீடுதான்.

திரு. தம்பு துரைராசா அவர்களின் இளமையின் இரகசியம் பிறர்நினைப்பார் கூறுவது போல மாண்பு மிக்க மனைவி, மனத்திற்கினிய மக்கள், நல்லாறு தெரிந்த நண்பர்குழாம். இவை மட்டுமல்ல திரு. துரைராசா அவர்கள் புசிப்பதும், வாசிப்பதும், நேசிப்பதும் ஏன்.... சுவாசிப்பதும் கூட திருவாசகம்..... திருவாசகம்..... திருவாசகம் தான். திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் உறுப்பினர். சுவாமிகளது நினைவாக திருக்கேதீச்சரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மண்டபம் அமைய ஆணிவேராக செயற்பட்டவர். இவரது பெருமுயற்சியின் பயனாகவே "ஈழத்துச் சிவாலயங்கள்" நூல் உருவாக்கம் பெற்றது. இந்திய, இலங்கைத் திருநாட்டிலுள்ள தலங்கள் தோறும் சென்று வழிபடும் பெருவிருப்பு மிக்கவர். மனித நேயப்பண்பாளர். எடுத்த காரியங்களை இனிதே முடிக்கும் துணிவும் உறுதியும் கொண்டவர்.

*"அருமையுடைத்தென்று அசாவாமை வேண்டும்*
*பெருமை முயற்சி தரும்."*

என்ற வள்ளுவத்தின் வாய்மொழி நிற்பவர். தாழ்வினைச் செய்வர். அறப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இன்பம் காண்பவர். தனது திருமண வாழ்விலும் மங்கல அறுபதைப் பூர்த்தி செய்தவர். திரு. தம்பு துரைராசா அவர்களின் ஏற்றத்திற்கும், தோற்றத்திற்கும் காரணமே என்பதாவது அகவையில் காம்பதிக்கும் அவரது மங்கல மனையாள் திருமதி. இரத்தினேஸ்வரி அம்மையார் அவர்கள்தான். காதலன் ஒருவனைக் கரம்பிடித்து அவனது காரியம் யாவிலுக்கும் கைகொடுக்கும். அந்த பாக்கியவதியானை பிறந்தகன் பயன் இன்று துரைசாரா பெயருக்கேற்பவே "இராசா"வாக விளங்குகின்றார்.

"புருஷே சதாயுஷ" என்ற பொன்மொழியின் வண்ணம் எஞ்சியுள்ள ஆண்டுகளையும் நிறைவாக்கி, மேலும் பல ஆண்டுகள் மங்கலம் பொங்க வாழுமாறு "அபிர்தகடேசன் உடனுறை அபிராமி" தாயின் அடிபணிந்து, மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

"தலமே தழைக"

அன்புடன்

யாழ்ப்பாணம், [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# "சைவம் போற்றுதும் 2018"

## விருதுச் சான்றிதழ்



இலங்கை சைவநெறிக் கழகத்தினர் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில்

2018 ஏப்ரல் 07ஆம் திகதி (சனிக்கிழமை) அன்று

நிகழ்த்திய "சைவம் போற்றுதும்" விழாவில்

திரு-திருமதி திருவாசகம் தம்புத்துரைராஜா அவர்களது

சமய - சமூக சேவைகளைப் பாராட்டி

சைவநெறிச் செல்வர்

எனும் விருது வழங்கப்பட்டதை சிறப்பிக்குமுகமாக

இச்சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| Dr.கி.பிரதாபன் | திரு.வி.துலாஞ்சனன் | திரு.ரா.ராஜகுமார் |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திடமும், திட்டமுங்கொண்ட தீரர் திருவாசகர் "கலாபூஷணம்" தம்பு துரைராசா பெரியார்

கரும வீரர் செந்தண்மையாளர் திருவாசக 'கலாபூஷணம்' தம்பு துரைராசா ஐயாவின் வாழ்வியல் சீர்மை தொகுப்புக்கு வாழ்த்துத் தெரிவிப்பதிலே மட்டற்ற மன மகிழ்வடைகின்றேன். தான் நம்பியவர்களை, நேசிப்பர்களை அவர்கள் எங்கிருந்தாலும் தேடி, ஓடி, நாடி வந்து அளவளாவும் அருங்குணம் படைத்தவர். இவரை யாழ்ப்பாணத்தில் ஈச்சமோாட்டை ஞானரைவர் கோவில் சொற்பொழிவிலே யான் முதன் முதலில் சந்தித்தேன். யாழ்.பாண்டியன்தாழ்வில் இவரது இல்லம் அமைந்திருந்தது. கற்றோர் உறவில் கரிசனை கொண்டு, தம் பணியிலே எம்மையும் இணைத்து இன்ப சுகம் பெறுவர். பலரையும் அணுகிச் சமயச்சொற்பொழிவை நிகழ்த்துவித்து உபசரிப்பவர். திருவாசக சுவாமிகளது கலாச்சார மண்டபத்தின் தொடக்குனர். தர்மகர்த்தா. தலைமை நிர்வாகி. திருவாசகத் தேனமுதத் தொண்டில் திளைத்து மகிழ்பவர். தமது வயது, முதுமை, இளைப்பு, களைப்பு, இயலாமை என்பவற்றையும் கவனிக்காதவர். தினமும் தேகப்பயிற்சி செய்பவர். வாழ்விலும் செயலிலும் திடமும் திடமுங் கொண்டவர். ஆன்மீகச் செல்வர்கள் மீது அளவற்ற பற்றுக் கொண்ட இவர் அருளாளர்களது புகழ் பரப்புவதிலும் தமது பொருளைச் செலவு செய்து உபகரித்துள்ளமையைக் குறிப்பிடுவது அவசியமாகும். திருவாசக சுவாமிகள் மீதும் சிவயோக சுவாமிகள் மீதும் பெரிதும் ஈடுபாடு கொண்ட இவர் கலாசார மண்டபத்தையும் சிவயோக சுவாமிகள் ஆச்சிரமக் கட்டிட நிதிக்காக ஒரு தொகைப் பணத்தை உபகரித்தமையும் கருதத்தக்கவையாகும். சிவனடியே சிந்தித்த திருத் தொண்டர்கள் திருவுரு திருக்கேதீச்சரத்தில் கலாச்சார மண்டபத்தை அருள் நிலைப்படுத்துவது நேரிலே சென்று பார்க்க வேண்டிய செயல். செயற்றிறன், நிறைவுடன் செயலாற்றும் வேட்கை, குடும்பப் பாசம் - சமயம் ஈடுபாடு, அறிவாளர் நட்பு, துயர்துடைப்பில் அக்கறை - ஈகை, உபகரிப்பு என்பன இவரது பிறவிக் குணநலன்கள். தொண்டர்க்குத் தொண்டனாய் நின்று பணிபுரியும் திடமனது பொன்னாலையுறை பெருமாள் ஈந்த அருங்கொடை பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கண்டு இளமை நலன்மிக்கு வாழும் இவ்விளைஞனின் நேரிய, சீரிய ஒழுங்கு முறையான வாழ்க்கை மானிடர்க்கு முன்மாதிரி. பின்பற்றத் தகுந்த செழுமைமிக்கது. உய்யும் வகையறிந்து உயர்வான எண்ணங்களுடன் தொண்டாற்றி வாழும் இவர் இன்னும் துடிப்புடன் சிரஞ்சீவியாய் வாழ எம் குலதெய்வம் நயினைதீவு நாகபூஷணி அம்பாளின் திருவருளைச் சிந்தித்து, வந்தித்து வாழ்த்துகிறோம்.

*பேராசிரியர் டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன்*
*மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"VIRAKESARI - TSUNAMI DISASTER RELIEF FUND" № 257

EXPRESS NEWSPAPERS (CEY) LTD.

185, GRANDPASS ROAD, COLOMBO-14.

RECEIPT 2005.01.04.

Name Mr. Thambu Thurairajah - Secretary Thiruvasagam Srimath Sabaratnam Swamigal Thondar Sabai.

Address 31. A - Janaki Lane, Bambalapitiya.

Amount received with thanks Rupees Five Thousand Five Hundred and Twenty Four & Cents Fourty Nine Only (December 2004 Pension)

Rs. 5,524-49.

4/1/05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THIRUKETHEESWARAM TEMPLE RESTORATION SOCIETY

## திருகேதீச்சர ஆலயத் திருபணிச் சபை

தொண்டர் நாள்தோறும் அருள்செய்கேதீச்சர மதுதானே

24 Deal Place "A" Colombo 3. Tel: 94 11 257 5566 Fax: 94 11 257 5472

(An Approved Charity-Vide Govt. Gazette No. 13992 of 20.03.1964)

President & Member Board of Trustees
**R. Namasivayam**
Attorney-at-Law
Tel: 2360316

Dy. President
**M. Thavayogarajah**
Tel: 2695120

Joint Secretary TTRS & Secretary Board of Trustees
**S. Raghavan**
Tel: 2595668

Joint Secretary
**Pulavar A. Thirunavukkarasu J.P**
Tel: 2586042

Joint Treasurer & Member Board of Trustees
**S. Thiruvathavooran**
Tel: 2588144

Joint Treasurer
**Mrs. A. Kailasapillai**
Tel: 2575566 Fax: 2575472

Joint Treasurer
**S. Ramakrishnan**
Tel: 023-2222769

**Board of Trustees**

**V. Kailasapillai F.C.A**
Chairman
Tel: 2575566 Fax: 2575472

**Kandiah Neelakandan**
Tel: 2580807, 2371100

**Dr. Pon. Wicnarajah**

**A. S. Gunasingham**

**S. Thiyagarajah (S.T.R)**

**S. Sivalingam**

**AR. AR. Arunasalam Chettiar***
Rep. Old Kathiresan Temple

**S. Subramaniam Chettiar**
Rep. New Kathiresan Temple

திரு சி. தியாகராஜா STR
தலைவர்
ஸ்ரீமத் சுபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை

திருக்கேதீச்சர ஆலயக் காணியில் இத்துடன், இணைக்கப் பட்டுள்ள படத்தில் ...A1... என அடையாளமிடப்பட்ட ...125'... x ...100'... விசாலமான துண்டுக் காணி தங்கள் நிறுவனம் / குடும்பம் ஒரு மடம் / ......—...... கட்ட ஒதுக்கப்படுகின்றது.

இந்த அனுமதி பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்படுகிறது:

*1). கட்டிடத்தின்படம் திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் அறங்காவலர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.*

*2). கட்டிடத்தைப் பெற்ற நோக்கத்திற்கு மட்டும் பாவிக்கலாம்.*

*3). கட்டிடம் இன்றைய திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும். போதிய காரணம் காட்டப்பட்டால் ஆலய அறங்காவலர் சபை, கட்டிடத்தைக் கட்டி முடிக்க மேலும் தவணை தரக்கூடும்.*

*4). இந்தக் காணியைப் பெற்ற தனி நபர் எவரும் அக்காணியை எவருக்கும் கையளிக்கவோ, குத்தகைக்கோ அல்லது வேறெந்த முறையிலோ வழங்கக்கூடாது.*

*5).* உங்களின் பின் உங்களினால் நியமிக்கப்பட்ட வாரிசுகளுக்கு அனுமதி வழங்குவதானால், அவர்கள் இலங்கையில் இருப்பவர்களாகவும் சைவசமயத்தவர்களாகவும் இருக்க வேண்டும். இது பற்றி அறங்காவலர் சபையின் முடிவே இறுதியானதாக அமைய வேண்டும்.*

அறங்காவலர்சபைத் தீர்மானத்தின்படி

செயலாளர்
21/05/10

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

TTRS-Report21(Ends) KN/TB

* தனிப்பட்டவர்களுக்கு மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்கொடை விபரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு.தம்பு.துரைராசா கொழும்பு - 04 | 160,000 .00 |
| 2. | திரு.துரைராசா ஸ்ரீதரன் U.K | 29,650 .00 |
| 3. | திருமதி.கவிதா ஞானசம்பந்தன் U.K | 10,000 .00 |
| 4. | திரு.எஸ்.மாணிக்கவாசகர் கொழும்பு | 5,000 .00 |
| 5. | திருமதி வசந்தா தனபாலசிங்கம் Aust | 10,000 .00 |
| 6. | திரு மாணிக்கவாசகர் சரண்ராஜ் கொழும்பு 06 | 410,000 .00 |
| 7. | திரு.மு.ஞானசம்பந்தன் கனடா | 5,000 .00 |
| 8. | திரு.ச.வசந்தகுமாரன் | 5,000 .00 |
| 9. | திரு.A.M.T.தனயகம் | 3,000 .00 |
| 10. | அமுதா நாகலிங்கம் | 1,500 .00 |
| 11. | திரு.ரஞ்சன் U.K | 20,000 .00 |
| 12. | திரு.C.P. சிவராஜ் U.K | 3,000 .00 |
| 13. | திரு.R.கார்த்திகேயன் கொழும்பு 06 | 2,000 .00 |
| 14. | திரு.இ.லோகநாதன் கோப்பாய் | 7,000 .00 |
| 15. | திரு.பரமசிவம் Aust | 2,000 .00 |
| 16. | திருமதி.ராணி நீர்கொழும்பு | 7,000 .00 |
| 17. | திரு.துரைராசா விஜயதரன் U.K | 18,450 .00 |
| 18. | திருமதி.சாந்தா குகதாசன் குடும்பம் கொழும்பு | 11,000 .00 |
| 19. | திரு.சு.சிவநாதன் ஜேர்மனி | 10,000 .00 |
| 20. | செல்வி.ரதி தெகிவளை | 2,000 .00 |
| 21. | திருமதி.ஞானரதன் கனடா | 5,000 .00 |
| 22. | திருமதி.சாந்தி பிரகாஷ் U.K | 77,655 .00 |
| 23. | திருமதி.வித்தியா நிதர்சன் கொழும்பு | 4,000 .00 |
| 24. | திரு.R.யோகலிங்கம் கோப்பாய் | 1,000 .00 |
| 25. | Mr.X.A.Fernando/Balaji | 1,080 .00 |
| 26. | திரு.க.நாகரத்தினம் மல்லாகம் | 500 .00 |
| 27. | செல்வி.சாரதா Colombo 06 | 1,000 .00 |
| 28. | குளிர்சாதனப்பெட்டி மூலமாக | 30,000 .00 |
| 29. | திருமதி.ப.ஞானசம்பந்தன் USA | 10,000 .00 |
| 30. | Dr.K.சுரேஸ்குமார் யாழ்ப்பாணம் | 30,000 .00 |
| 31. | மகாராஜா களஞ்சியம் குகன்குடும்பம் Colombo 06 | 10,000 .00 |
| 32. | திரு.செ.பேரின்பம் கொழும்பு | 50,000 .00 |
| 33. | திரு.எஸ்.அமரநாத் கொழும்பு | 10,000 .00 |
| 34. | உண்டியல் மூலம் வரவு | 323,450 .00 |
| | **மொத்தம்** | **Rs.1,275,285 .00** |

(வே.பொ.மாணிக்கவாசகர்)
பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

### சிவமயம்

### திருவாசகம் ஸ்ரீமத் சுபாரத்தினம் சுவாமிகள் தொண்டர்சபை

### திருக்கேதீஸ்வரம், மன்னார்

### வரவு - செலவு அறிக்கை (01.01.2017 - 30.11.2017)

**வரவுகள்**

01.01.2017ல் உள்ளவாறான ஆரம்ப மீதி

| | | |
|---|---|---|
| காசு | 4,176 .00 | |
| Bank HNB C/A | 35,258 .44 | |
| Bank HNB S/A | 10,739 .34 | |
| Bank P/B S/A | 5,643 .53 | 55,817 .31 |
| வங்கி வட்டி HNB S/A | 2,059 .60 | |
| வங்கி வட்டி P/B S/A | 132 .39 | 2,191 .99 |
| நன்கொடைகள் | | 1,275,285 .00 |
| **மொத்த வரவு** | | **1,333,294 .30** |

**செலவுகள்**

| | | |
|---|---|---|
| Idols | 33,000 00 | |
| Adm. Expenses | 158,910 .50 | |
| Wages | 132,200 .00 | |
| Transport Expenses | 7,600 .00 | |
| Repairs & Maintenance Expenses | 27,553 .00 | |
| Pooja Expenses | 166,524 .00 | |
| NWS + DB (Water Bills) | 15,220 .00 | |
| CEB (Electricals Bills) | 6,515 .00 | |
| Construction Expenses | 412,348 .00 | |
| Travelling Expenses (Secretary) | 22,730 .00 | |
| Bank charges | 1,362 .05 | |
| **Total Expenses** | | **983,962 .55** |
| **Excess of income over Expenses** | | **349,331 .75** |

| | | |
|---|---|---|
| Balance as at 30.11.2017 | | |
| Cash in hand | 17,666 .00 | |
| Bank HNB C/A | 5,227 .94 | |
| Bank HNB C/A | 320,661 .89 | |
| Bank P/B S/A | 5,775 .92 | |
| | | 349,331 .75 |

| | | |
|---|---|---|
| President | Secretary | Treasurer |
| (S.Thiyagarajah) | (T.Thurairajah) | V.(V.P.Manikkavasakar) |
| | | Treasurer |
| S. Thiyagarajah | T. Thurairajah | |
| PRESIDENT | SECRETARY | V. P. Manikkavasakar |
| | | Treasurer |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

திருக்கேதீஸ்வரம்
"திருவாசகம்" ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் நினைவாக



மாதந்தோறும் மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிய திருவாசகம் முற்றோதல்.

காலம்: அதிகாலை 5.00 மணி தொடக்கம்

இடம் : "திருவாசகம்" ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள்
இந்துக் கலாசார மண்டபம் திருக்கேதீஸ்வரம்.

| மாதாந்த திருவாசகம் முற்றோதல் தினங்கள் - 2018 | | | |
|---|---|---|---|
| தை | January | 01-01-2018 | திங்கள் |
| மாசி | February | 14-02-2018 | செவ்வாய் |
| | (சிவன்ராத்திரி மறுநாள் தீர்த்தத்தை முன்னிட்டு வழமை போன்று மதியம் திருவமுது வழங்கல் இடம்பெறும்) | | |
| பங்குனி | March | 31-03-2018 | சனி |
| சித்திரை | April | 29-04-2018 | ஞாயிறு |
| வைகாசி | May | 29-05-2018 | செவ்வாய் |
| ஆனி | June | 27-06-2018 | புதன் |
| ஆடி | July | 27-07-2018 | வெள்ளி |
| ஆவணி | August | 26-08-2018 | ஞாயிறு |
| புரட்டாதி | September | 24-09-2018 | திங்கள் |
| ஐப்பசி | October | 24-10-2018 | புதன் |
| கார்த்திகை | November | 22-11-2018 | வியாழன் |
| மார்கழி | December | 22-12-2018 | சனி |

❖ மதியம் திருவமுது வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. தியாகராசா S.T.R
தலைவர்

த. துரைராசா
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. Thiyagarajah STR
PRESIDENT
D/3/1 Govt.Flats,
Colombo - 04.
Tel : 2582597

THIRUVASAGAM
**SRIMATH SABARATNAM SWAMIGAL THONDAR SABAI**
Reg.No. HA/4/J/165

T. Thurairajah
SECRETARY
"Thiruvasagam"
31A Janaki Lane, Bambalapitiya,
Colombo - 04.
Tel : ~~4515042~~ 4852232

# ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை

தலைவர் அவர்கள்,
திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபை
திருக்கேதீச்சரம்

அன்புடைய ஐயா

தங்களால் எமக்கு அனுப்பப்பட்ட நிபந்தனைகள் தொடர்பான கடிதத்திற்கான விடையங்களை திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையின் சார்பாக இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

1. திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் கலாசார மண்டபத்திற்கான கட்டிட வரை படத்தினை தங்கள் அங்கீகாரத்துக்காக இத்துடன் இணைத்துள்ளேன்.

2. கட்டிடம் இந்துசமய அபிவிருத்திக்காக மட்டும் பயன்படுத்தப்படும். இதில் இந்து சமய முறைப்படி மாத்திரம் நடைபெறக்கூடிய கல்யாண மண்டபம், இந்து சமய நூலகம், எமது சைவ சமய வழிபாட்டிற்கான கலாசார மண்டபமே அமைக்கப்படும்.

3. கலாசார மண்டபம் கட்டுவதற்கான தங்கள் அனுமதி கிடைத்த திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் கட்டிடம் பூர்த்தியாக்கப்படும்.

4. காணி எவருக்கும் கையளிக்கவோ அன்றிக் குத்தகைக்கோ அளிக்கப்பட மாட்டாது.

5. தற்போதைய ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையின் ஏகமனதான தீர்மானத்தின்படி தற்போதைய உரித்தாளர் திரு.எஸ்.தியாகராசா அவர்களின் மனைவியும் அவர்களின் இலங்கையில் வதியும் பிள்ளைகள் மக்கள் இக் கலாசார மண்டபத்தின் வழி வழிவம்சாவழி உரித்தாளர்களாக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று தற்போதைய செயலாளர் திரு.த.துரைராசா அவர்களின் மனைவியும் அவர்களின் இலங்கையில் வதியும் பிள்ளைகள் மருமக்கள் வழி வழிவம்சாவழி உரித்தாளர்களாக இருப்பார்கள்.

மேற்படி தீர்மானங்கள் எமது திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையின் பொதுச்சபையினால் 27.06.2010ல் நடந்த கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும்.

கிராம அலுவலகம்
அடம்பன்
2018.08.27

தலைவர்
ஸ்ரீமத் சபாரத்தினம்மடம்,
திருக்கேதீஸ்வரம்

மதிப்பிற்குரிய ஐயா அவர்கட்கு

# நன்றி கூறுகின்றேன்

மேற்படி எனது பிரிவில் நடக்க முடியாமல் கட்டிலில் பத்தபடுக்கையாக உள்ள இரண்டு நபர்களுக்கு கருணை கொண்டு அவர்கள் உலாவுவதற்கான சக்கர வண்டிகளை அன்பளிப்பாக வழங்கியமைக்காக எனது பிரிவு சார்ந்ததும் பிரதேச செயலகம் சார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

1. கவிச்செல்வன் மகேஸ்வரி - அடம்பன்
2. பிறிட்டோ - வண்ணாகுளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்துக் கலாசார நிலையம்
திருக்கேதீஸ்வரம், மன்னார்
தொலைபேசி : 023 7900002

THIRUVASAGAM
SRIMATH SABARATNAM SWAMIGAL THONDAR SABAI
THIRUKKETHEESWARAM, MANNAR.

Regd.No:- HA/4/MN36 பதிவு இல.: HA/4/MN36

திருவாசகம்
ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை
திருக்கேதீஸ்வரம், மன்னார்.



"Thiruvasagam"
31A, Janaki Lane, Colombo-04
Tel. :- 011 4852232

Mr. S. Thiyagarajah (STR) President | Mr. V. Thiruneelakandan Vice President | Mr. T. Thurairajah Secretary & Administration | Mr. Raa. Senthilkumaran Asst. Secretary | Mr. V. P. Manikkavasakar Treasurer

## திருக்கேதீச்சரத்தில் கௌரி அம்மன் வாசலில் தர்மப்பணி புரியும் திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின்

# கலாசார மண்டபத்துத் தொண்டர்பணிகள்

பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரத்தில் 2013ஆம் ஆண்டு ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் இந்துகலாசார நிலையத்தை அமைத்து பிரதான தினத்திலே சமய, கலாசார, குருபூசை, திருவாசக விளக்க நிகழ்ச்சிகளையும் அடியார்களுக்குத் திருவமுது வழங்கற் திருப்பணிகளையும் நிகழ்த்தி வருகின்றோம். இக்காலாசர நிலையத்தின் பணிகளைத் தொண்டர் சபையினரே முன்னெடுத்து வருகின்றனர். பொதுமண்டபத்துடன் கூடியதும் இணைந்த குளியலறை வசதியுடன் ஐந்து வசதியான அறைகளைக் கொண்டதுமான அமைப்பில் இக் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

திருவாசகம் தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவமளிக்கும் இத் தொண்டர் சபையின் காரியங்களுடன் மண்டபத்தில் மாணிக்கவாசக சுவாமிகளின் ஐம்பொன்னிலான சிலையும் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கான பணத்தை தலைவர் S.T.R ஐயா உபகரித்துள்ளார். அடியார்களது வசதி கருதி சிவராத்திரிக்கு மறுநாள் தீர்த்தத்தின் போதும் ஆலய மகோற்சவ தீர்த்தத்தின் போதும் திருவமுது சேவை வழங்கப்பட்டு வருகிறது. ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்கள் தங்கிச்செல்வதற்குச் சிறிய நன்கொடை உதவியுடன் திருக்கேதீச்சர கலாசார மண்டபத்தில் வசதிகள் உள்ளன. சமூக சேவையும் கிராம சேவை அதிகாரியின் சிபாரிசில் நடைபெற்று வருகிறது. 03.11.2017 அன்று கிராம அலுவலர் திரு.வி.செல்வக்குமரன் அவர்களது சிபாரிசில் வறிய குடும்பத்தலைவரான பெண்மணி ச.வசந்தமாலா என்பவருக்கு தையல் இயந்திரம் கௌரவ செயலாளர் கலாபூஷணம் த.துரைராஜா தம்பதியரால் வழங்கப்பட்டது.

திருக்கேதீச்சரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்குப் பாடசாலைக்குச் செல்வதற்குப் போக்குவரத்து உதவிவேண்டும் என்று அவரது பெற்றோர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொண்டமைக்கிணங்க 25.01.2018 அன்று சைக்கிள் வண்டி ஒன்று குருபூசைத்தினத்தன்று வழங்கப்பட்டது. இக் கலாசார மண்டபத்தில் மங்களகரமான வைபவங்கள் நிகழத்துவதற்கும் வசதிகள் உள்ளன. பிரபலமான சைவ சமய பிரசாரகர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பண்ணிசை விற்பன்னர்கள், கதாப்பிரசங்கக் கலைஞர்கள் அனைவருக்குமுரிய சமயப் பணிகளாற்றும் இடமாகவும் இக்கலாசார மண்டபம் திகழ்கின்றது.

அண்மையில் மன்னார் மாவட்ட ஆலயங்களின் தலைவரும், இந்து சமயத் தொண்டருமான வைத்திய நிபுணர் டாக்டர் மு.கதிர்காமநாதன் அவர்களது சமய சேவையைப் பாராட்டிக் கௌரவித்தமையும் குறிப்பிடத்தக்கது. தொண்டர் சபையின் தலைவர் திருப்பணித்தவமணி எஸ்.தியாகராசா (எஸ்.டி.ஆர்) ஆவார். கௌரவ செயலாளர் கலாபூஷணம் தம்பு-துரைராசா ஆவார்.

**திருக்கேதீஷ்வரம் மண்டபத் தொலைபேசி : 023 7900002**
**முன்பதிவுத் தொடர் இல. : 0114852232**
**திருவாசகம், 31A, ஜானகி ஒழுங்கை**
**கொழும்பு - 04**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேடிலாத கேதீச்சரத்தில் ஈடிலாத்திருவாசக மடம் அமைத்த திருவாசகச் சுவாமிகள்
# 28.03.1904 - 25.01.1988

## நுழைவாயில்

தொல்பதியாம் திருக்கேதீசுவர மகிமையறிந்த நாவலர் பெருமான் திருக் கேதீசுவரத்தில் ஒரு தேன்பொந்து இருக்கிறது. அதைக்காப்பாற்ற வாருங்களெனச் சைவப் பெருங்குடி மக்களை அறைகூவினார். செட்டி நாட்டவர்கள் அதற்குக் கைகொடுத்தனர். இவர்களில் ஒருவரான பசுபதிச் செட்டியார் இத்தலத்தினை மீளவும் புனருத்தாரணஞ் செய்ய முன்வந்தார். திருக்கேதீஸ்வரம் மீளவும் உருவான கதை இது.

பல தலயாத்திரைகளை மேற்கொண்ட ஒரு பழவடியார் நாற்பதுகளில் (1910) திருக்கோணமாமலையில் இருந்து திருக்கேதீஸ்வரம் வந்துசேர்ந்தார். அவரே சபாரத்தினம் என்னும் பெயரோன். இவர் இப்பதிக்கு வந்தடைந்தபோது ஆலயத்தில் மூவர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். ஒருவர் அர்ச்சகர்(விப்ரர்) இன்னொருவர் ஆலயக் கணக்குப்பிள்ளை. மற்றவர் பூத்தொண்டு(பண்டாரம்) செய்பவர். பாடல் பெற்ற தலத்தை நாடியோடி வந்த சபாரத்தினம் தான் தங்க ஒரு தென்னங்கீற்றுக் கொட்டிலமத்துக் கொண்டு அங்கேயே வதிந்தார். இத்தபோதனர் பிற்றாலத்தில் திருவாசகச்சாமியெனப் பெயர் பெற்றார். திருவாசகத்திலேயவர் ஆழங்காற்பட்டதினாலே திருவாசக மடத்தை அமைத்துச் சரவணமுத்துச் சுவாமியிடமே ஒப்படைத்தார். காரணம் திருப்பணி கருப்பணிக்கு(பிறவிக்கு) வித்திடக்கூடாது என்பதுதான். சரவணமுத்துச் சுவாமிகள் தன் கைப்பட எழுதிய கட்டுரை இதற்குச் சான்று பகர்கின்றது.

## திருக்கேதீசுவரம் சபாரத்தினம் சுவாமிகள்

''உயர்திரு சாபரத்தினம் சுவாமிகள் ஒரு தீர்க்கதரிசி. கர்மவீரர் இவர்கள் திருக்கேதீசுவரத்தில் திருவாசகத்தைப் பாராயணம் செய்தும், மற்றவர்களைத் திருவாசகத்தில் ஈடுபடுத்தியது மட்டுமல்ல அடியார்களை உபசரித்து அமுது வழங்கியவர். சேர் கந்தையா வைத்தியநாதன் ஐயாவுக்கு வலது கையாக இருந்து பல பணிகள் ஆற்றி உள்ளார். திருவாசக மடம் நிறுவி, விழா நடத்த ஏற்பாடு செய்தார். வைத்தியநாதன் ஐயா ஏற்பாட்டில் கௌரீசர் பாடசாலை கட்டிமுடித்தார். நெசவுசாலை கட்டி முடித்தார். தனித்து நின்ற திருவாசகமடத்தில் 35 அடி ஆழக்கிணறு உண்டு பண்ணினார். அதுமட்டுமல்லாமல் நல்லூர்த் திருவிழாவிற்குத் திருக்கேதீஸ்வரத்தில் இருந்து கால்நடையாகவே வருவார். ஒரு நாள் வெள்ளாங் குளத்தில் ஓர் காட்டுயானை இவரை மறித்தது. உடனே உன்னிடத்தில் இருப்பதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடத்திலும் இருக்கிறது என்று நின்றுவிட்டார். யானை வணக்கம் செய்து திரும்பிவிட்டது.... என்னே அற்புதம்.

திருக்கேதீஸ்வரத்தில் தொண்டு செய்து வந்த பஞ்சாட்சர அம்மா மரணப்படுக்கையில் இருந்தபோது சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். நாங்கள் சுவாமிகள் இல்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த போது, சுவாமிக்குத் திருவருள் உணர்த்தத் திடீரென்று சுவாமிகள் திருக்கேதீஸ்வரம் வந்து சேர்ந்தார். சுவாமி வந்த பின்தான் அம்மா இறைவனடி சேர்ந்தார். அவர்கள் ஓர் அற்புத சுவாமிகள். அவரின் பெருமையை எழுதமுடியாது. சிதம்பரம் நடராஜாருடன் நந்தனார், மாணிக்கவாசகர் போல் சேர்ந்திருப்பார். இந்திய யாத்திரை கால் நடையாகச் செல்வார். சிதம்பரத்தைக் கண்டு அந்த எல்லையைக் கடவாமல் அங்கேயே இருப்பார். அவர் எனக்கு முன்னரே திருக்கேதீசுவரத்தையடைந்து திருப்பணிகள் முற்றுவிக்க உறுதுணையாய் இருந்து கும்பாபிஷகம் கண்டு ஆனந்தம் அடைந்தவர். அவர் திருவடிக்கு நாம் வணக்கம் செய்து அவரின் திருவுருவத்தை வணங்குவோமாக. சுவாமிகள் திருக்கேதீசுவரத்தில் இருந்திருந்தால் கோயில் முடப்பட்டிருக்காது. நாமும் அநாதைகளாக வெளியேறி இருக்கமாட்டோம். ஏதோ இருவினைப் பாசக் கயிற்றின் வழி ஆட்டுவிப்பானுடைய செயலை யார் அறியமுடியும்?

***சி. சரவணமுத்து***
***திருவாசக மடம், திருக்கேதீசுவரம்.***

❑ ❑ ❑

# திருக்கேதீஸ்வரம் – திருவாசம் ஸ்ரீ சாரத்தினம் சுவாமிகள்

**அவதாரம் :**

இறையருள் பெற்றதிவ்விய தொண்டனான சபாரத்தின சுவாமிகள் 1904ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் திருவாதிரை நாளில் (1904.03.208) அல்வாய் ஊரைச் சேர்ந்த உயர்.திரு சின்னத்தம்பி என்பவருக்கும் சிவயோகசுவாமிகள் வாசம் செய்த கொழும்புத்துறையின் அயற்கிராமமான பாண்டியன்தாழ்வு சின்னத்தங்கம் அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வனாக அவதரித்தார். இவருக்கு இரு தம்பியர்கள். இளமையிலேயே யோகர் சுவாமிகளின் அருட்பார்வை இவருக்குக் கிட்டியமை இவர் முன்னாற்றிய தவப்பயனாம்.

**கல்விகற்றமை**

ஆரம்பக் கல்வியைக் கொழும்புத்துறை, சைவப்பாடசாலையில் மேற்கொண்டார். பின்னர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிற் சேர்க்கப்பட்டுப் படித்துக்கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதே மதமாற்றம் வேண்டுமென வற்புறுத்தப்பட்டமையால் வெளியேறினார். பின் சில காலம்(பள்ளி) ஆசிரியராய்க் கடமையாற்றினார். பாடசாலைப் பரிசோதகர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் ஏற்பட்டமையாற் பதவியைத் துறந்தார்.

## இல்லறமும் துறவறமும்

திருமணம் செய்தார். சிறிதளவு காலத்திலேயே குழந்தைச் செல்வமில்லாமலே மனைவியும் மறைந்தார். திருமணம் முடித்தார். ஆனால் சிலகாலம் சென்றும் இன்பம் தருமகவொன்றுங் காணார் தாரமும் விண்புகுந்தார். திருவருட் செயலீதென்று சிதம்பரம் பயணமானார். அருள்பெற்றார். இலங்கை வந்தார். ஆலயம் பலவும் சென்றார். நால்வரின் பாடலெல்லாம் நாளெல்லாம் ஓதி ஓதி மேல் வரும் பொருளுணர்ந்து மெயந்நெறியூட்டுகின்ற பால் பழம் தேன் பாகாகிப் பயில்தரு திருவாசகத்தை நூல்களிற் பெரிதாய்ப் போற்றி நுழைந்தனர். சுவைத்தும் கற்றார்.

## திருக்கேதீசரத்திற் சுவாமிகளின் பணி

வாய்ந்திடும் திருவாசக மடத்தினை
ஆய்ந்திடும் பாருள் அனைத்தையும் - சுமந்துவந்(து)
ஏய்ந்த வண்ணம் எழிலுறக் கட்டிவான்
தோய்ந்த வாசகச் சுருதி வளர்ந்தனர்

– *கலாநிதி அருட்கவி. சீ. விநாசித்தம்பி*

❑ ❑ ❑

## நூலாசிரியரின் குருதேவர் சபாரத்தினம் சுவாமிகள்

உருகாத மனத்தினையும் நெக்குருக்கி
உளமார சிவபிரானின் பதமேசேர்க்கும்
பெருவாசகத் தேனைப் பொழிந்து மாந்தர்
பேரின்ப வாரிதியில் ஒன்று சேரத்
தருமாசபாரத்ன செம்மல் சேவை
தாரணியில் மாந்தரது நெஞ்சில் என்றும்
திருவாசகம் போலத்தித்தித் தன்பாய்
நிகழ்ந்திடு மே சபாரத்னம் வாழிவாழி!

*மகாவித்துவான் ந. வீரமணி ஐயர்.*

❑ ❑ ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகச் சுவாமிகள் எனப் போற்றப்படும் அளவிற்கு அந்நூலில் ஒன்றிவாழ்ந்த ஸ்ரீசபாரத்ன சுவாமிகளது நூற்றாண்டு விழாவில் அவரது நினைவை பக்தியுடனும் மரியாதையுடனும் போற்றி அமைகின்றோம்.

***சுவாமி ஆத்மானானந்தா***
***தலைவர்***
***கொழும்பு, இராமகிருஷ்ணமிசன்***

❑ ❑ ❑

ஸ்ரீசபாரத்தின சுவாமிகள் திருக்கேதீஸ்வரத்தைத் தனது தவநிலையாகக் கொண்டு வாழ்ந்தார். பேச்சும் வீச்சும் திருவாசகம் எனவே நினைத்திருந்தார். திருவாசகப் பெருங்கடலெனப் போற்றப்பட்ட சுவாமிகள் திருவாசகப் பதிகங்கள் அனைத்தினதும் நுட்பமான உட்பொருளை உணர்ந்தவராகவும், அனுபவித்தவராகவும் இருந்ததோடு பல நூற்றுக்கணக்கான அடியவர்களுக்கு அவற்றைப் போதித்தும் வந்தார்.

***க. பரமேஸ்வரன்***
***செயலாளர்***
***இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு***

❑ ❑ ❑

தேவாரம் பாடப்பட்ட திருத்தலமான திருக்கேதீஸ்வரத்திலே மடம் அமைத்து அடியவர்களுக்கு அமுது செய்ததோடு திருவாசகம் எனுந் தேனையும் அள்ளிப்பருக வழியமைத்துத்தந்தவர் சுவாமிகள்.

***சாந்தி திருநாவுக்கரசன்***
***பணிப்பாளர்***
***இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு.***

❑ ❑ ❑

திருவா சகத்தேன் மிகவுண்டார்
திருவா சமகமா மடங்கண்டார்
திருவா சகத்து விழாக்கண்டார்
திருவா சகப்பேர் தனைக்கொண்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுத்தெளிந்த கருமத்துணி
கணித்துக்கவருங் கழுத்துமணி
முற்றிமுழுதும் பழுத்தகனி
முற்றந் துறுந்த மௌனமுனி

– *கவிநயகர். வி. கந்தவனம்*

❑ ❑ ❑

பயல்வெள் ளோதி மந்நிகர்க்கு
பாவை தமிழ்மா தைத் தொழுவாம்
தணியாப் புகழ்சே சருந்திருவா
சகச்சவாமி யெனப் பெயர்கொள்
சபாரத் தினச்சீ வன்முத்தர்
தம்மை யினிது காக்கவே
குறைவி லடியார் தங்களொடுங்
கூடித் திருவா சகமமுதக்
குரலில் கேட்போருளம் நெகிழ்ந்து
குழைய மிழற்ற லேயின்பச்
சாறாக் கொண்ட சபாரத்ன
சாமி தாலே தாலேலோ
தமிழுஞ் சுவை மும்வழியாய்த்
தரித்தோய்தாலே தாலேலோ.

(சாறு-பூசனை)

❑ ❑ ❑

# திருவார் வாதவூரர் மொழி

மாண்ட சிறப்பின் வாசகத்தை
மாந்தி மக்கள் வாயூற
வழங்கித் திவா சகச் சுவாமி
வளங்சேர் யோகரூடிப்பேர்
பூண்ட மகிமைச் சபாரத்தினப்
புலவ கொட்டுக சப்பாணி
(யோக ரூடிப் பேர் - காரண இடுகுறிப்பெயர்)
மோனத் தவமார் சபாரத்ன
முனியேமுத்தம்தருகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்மார் வாதவூரர்திரு
          மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேன்
மாந்தி னருமைதேர்ந்துணர்ந்து
          மாந்தி யதனில் உள்ளூறிக்
கழிபே ரின்பச் சுவை நலமும்
          கருத்துக் கருவூர் லக்குவையும்
களித்து கேட்போர் தமக்குநின்போல்
          காட்ட வல்லார் யாருளரோ
தொழுதோம் மலர்த்தாள் சபார்னத்
          தோன்றால் வருக உளத்தடத்தில்
தோன்றித்திருவா சகவ முதைச்
          சொரிய வருக வருகவே!

**– பிள்ளைக் கவி. வ. சிவராசசிங்கம்**
*ஸ்ரீ திருவாசக சுவாமி பிள்ளைத்தமிழ்.*

❑ ❑ ❑

தமிழகத்திலே திருப்புகழ் மணியெனப் போற்றப்பட்டவர் கிருஷ்ணசாமி ஐயர். நம் மண்ணில் முத்தையா அவர்கள் திருப்புகழ்சாமியெனப் பெயர் பெற்றவர். இவ்வண்ணம் திருவாசகத்தில் தோய்ந்தெழிந்து அனுபூதி பெற்றவர் பாலசுப்பிரமணியம் அவர்கள். அவருக்குத் திருவாசக மணியென்ற விருது வழங்கிக் கௌவித்தனர். நம் ஈழத்தில் வாழ்ந்த சபாரத்தினப்பெருந்தகை பாடம் ஏறிய பின்னரும் பாடைஏறும் வரை திருவாசகத்தையே தாரமாகக் கொண்டு வாழ்ந்து காட்டினார். காய்தல், உவத்தல் இன்றி வாழந்த அப்பேரருளாளரை இரு பெரும் புலவர்கள் தாமாக்கிய பிரபந்தங்களில் திருவாசக சாமியெனப் பாடிப்போற்றினர்.

தேர்வீதி மார்க்கம் திரும்பிவலம் வரும்கால்
ஆரும் பெரும் தவத்தோன் அன்புருவோன், ஈரநெஞ்சன்
தெய்வ நலஞ்சேர் திருவாசச் சுவாமி
செய்ய சபாரத்தினந்தாள் சென்றுபணிந்து உய்யத்
திருவாசக மடத்தைச்சேர்...

**– பெரும் புலவர் சதாசிவம் பிள்ளை**
*திருக்கேதீஸ்வர நாதர் கிள்ளை விடுதூது*
*(ஈழத்துச் சிவனடியார் கூட்டத்தால் வெளியீடு செய்யப்பட்டது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்றிசையை நோக்கின் விரவும்ம ரச்சோலை
தோன்றுமதன் நாப்பணோர் தொல்குடிலில் நோற்றுயரும்
அன்புருவன்! என்புருவன்! ஆன்ற திருவாசகத்தேன்
இன்புடனே ஈந்துவக்கும் ஏற்றமுளான் தென்புதர
வீற்றிருக்கும் யோகிவிரதி சபாரத்தினமாம்
சாற்றரிய சாமிகுருதாள் பணிந்து போற்றிலுயர்...

**– வித்துவான் ஆறுமுகம்**

திருக்கேதீசுவரநாதர் வண்டு விடுதூது, கிள்ளை விடுதூதைப் படித்த சுவாமிகளின் சீடராய் வாழ்ந்த சோதி(ப்பிள்ளை) பொன்னுத்துரை(ஊரெழு) அவர்கள் திருவாசக சுவாமிகள் என்ற மகுடத்தில் ஓர் வியாசம் ஆத்மஜோதியில் எழுதித்தன் கருவின் பெருமையைச் சைவ உலகம் அறியச் செய்தார்.

கேதீஸ்வரப் பெருமானது திவ்விய தேசத்திற் சுமார் ஐந்து தசாப்தங்கள்(50 வருடங்கள்) வாழ்ந்த சுவாமி சபாரத்தினனார் உடன் அணுகத் தொண்டர்களாய் அறிந்தவர்களாய் இருந்தவர்களின் திருவாக்கில் இருந்து வந்த கருத்துக்கள் வருமாறு :-

இலங்கையிற் பாடல்பெற்ற தலங்களுள் திருக்கேதீசுவரமும் ஒன்றாகும். இங்குதான் சுவாமிகளின்(சபாரத்தினம்) ஆச்சிரமம் திருக்கேதீசுவரர் ஆலய அருகில் அமைந்திருந்தது. திருவெம்பாக் காலங்களில் சிவனடியார்கள் பல கோணங்களிலிருந்தும் திரள் திரளாக வருவார்கள். அங்கே அமைந்திருந்த திருவாசக மடத்திற்கு ஆதி முதல்வராகவும் கால்கோளாகவும் மகாசமாதியடைந்த தவத்திரு சபாரத்தின சுவாமிகளே காரணகர்த்தாவாக இருந்தார்.

❑ ❑ ❑

## புலவர் விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி

திருக்கேதீசுவரத்தில் திருத்தொண்டுகள் செய்து திருவாசகத்தை அனைவருக்கும் தெளிவுபடுத்தியதால் திருவாசக சுவாமிகளென்ற பெயரைப் பெற்றார்

**– சா. வே. சரவணமுத்து (ஆசைப்பிள்ளை)**

''துன்பத்தன்னைப் பார்க்கப் பெறாதவன் புண்ணிய மூர்த்தி. ஒக்கத் திருந்தி உலகேர்'' நலம் உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி'' என்ற பாரதியார் பாடலுக்கமையத் திருவாசக மடத்தைத் தானே யமைத்து அனைவர்க்கும் உடற்பசிக்கு உணவூட்டியதுடன் திருவாசகத்தின் மூலம் உள்ளொளியையும் பக்தி உணர்வையும் ஊட்டிப் பெருந் தொண்டாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றுமந்தச் சரீரத்தை எடுத்தபயன் அரன்கழலைச் சார்ந்து சூடி
நாற்றிசையு முத்துதிரு கேதீசர நாதனையே நம்பி நம்பி
ஏற்றவொரு மடங்கட்டி கிணறுவெட்டி அவ்விடத்தில் இறைவா என்றே
போற்றுதிரு வாசகமே பொருளாக வீற்றிருந்தார் புனிதமாக!

– ***கலாபூஷணம் வை. க. சிற்றம்பலம்.***

❑ ❑ ❑

கீர்த்திமிகு கேதீஸ்வரத் தண்ணல் பாதம்
கிழமையொடும் காலையிலே வேண்டிப்பின்னர்
கீர்த்திமிகு திருவாசகம் தன்னையோதி
சிறப்புடனே வருவோர்க்கு மெடுத்துக்கூறி
நேர்த்திமிகு அறுசுவையோ டன்மாக்கி
நேயமிகு மடியார்க்கு மளித்துமீதம்
பூர்த்திமிகு உள்ளமுடனே புசித்தேயென்றும்
புண்ணியனார் திருவடிக்கே குழைவாரன்றோ

– ***சிங்கையாழியான்***

❑ ❑ ❑

வவுனியாவில் நான் அரச அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் ஸ்ரீ சபாரட்ண அடியார் திருக்கேதீஸ்வரத்தில் திருவாசக மடம் அமைப்பதற்கு மரங்கள் கொண்டுசெல்ல அனுமதிப்பத்திரம் கேட்டார். கொடுத்தேன். காட்டிற் பெரிய மரங்களைவெட்டி தோளில் சுமந்து கொண்டு வந்து தனது வண்டிகளில் ஏற்றினார். அவரது ஆத்மீக தாகத்தையும் பக்தி வீறையும் அந்தக் காட்சியிற் கண்டேன்.

– ***செ. சிவஞானம்***
*முன்னைநாள் அரச அதிபர், வவுனியா*

❑ ❑ ❑

## சுவாமிகளின் வரலாற்றில்

வேதகாலத்தில் மனிதனது வயது 100 என்பர். சுவாமிகளின் வாழ்வு 84 அகவைகளைக் கெண்டது. 1904ல் இம்மண்ணில் பிறந்தார். 1988இல் உடலம் விட்டார். 1930ல் அவருக்கு வயது 26. வாழ்வின் முக்கிய அத்தியாயம் அங்கே துவங்குகிறது. இல்லறம் கண்டு மனையறம் மேற்கொண்டாலும் துணைவியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்ததும் எல்லாவற்றையும் துறந்து இறைவனைச் சிக்கெனப்பிடித்தார். சுமார் முப்பதுகளின் (1930) முற்கூற்றில் மறுவன்புலோவில் சின்னத்தம்பிச் சுவாமிகளின் சமாதியில் சிலகாலம் தொண்டாற்றினார். நான் இவ்வளவு காலம் பணி செய்தும் எனக்கொன்றும் கிடைக்கவில்லையே என மனம் நொந்தார். அன்றிரவே சின்னத்தம்பிச் சுவாமிகள் சொப்பனத்திற் தோன்றிப் பின்வருந் திருவாசகத்தை உபதேசம் செய்தார்.

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே
போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக்
கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட
வேண்டும் போற்றி
தருகநின் பாதம்போற்றி தமியனேன்
தனிமை தீர்த்தே.
- திருச்சதகம் 68

சின்னத்தம்பிச் சுவாமிகள் உபதேசம் அவரையொரு திருவாசகச் செம்மலாக்கியது. நாவலர் பதிப்பும் கையுமாய் இருந்து 656 வாசகங்களையும் மனனம் செய்து திருவாசக மயமானார். பின் சிலகாலம் அங்கே தங்கிச் சுதந்திர வேட்கையுடன் வெளியேறினார். பத்து ஆண்டுகள் யாத்திரை மேற்காண்டார். காசிவரை சென்றார்.

கதிர்காமத்துக்கு முப்பத்தைந்து தரம் தலயாத்திரை மேற்கொண்டார். ஒருமுறை மாணிக்க கங்கையில் நீராடி, சடையம்மா மடம் சென்ற வேளை ஒரன்பர்(சண்முகவடிவேலு என்ற நினைவு) காவியம் உருத்திராட்சமும் அளித்தார். அதனை அணிந்தார். அடிக்கடி கூறுவார் இந்தக்காவி வேடத்துக்கு என்னைத் தயார் பண்ண வேண்டும் என்று. அக்கட்டங்களில் ''ஒன்றும் போதா நாயேனை'' என்னால் அறியாப் பதம்'' ''ஏசா நிற்பர்'' என்ற திருவாசகங்களை எடுத்துக் காட்டாகச் சொல்வார்.

பிற்காலத்திலே தன் சொந்த இடப்பகுதியில் வாசஞ் செய்த இவர் 25.01.1988 ஆம் ஆண்டு அச்சுவினியில் இறைபதம் அடைந்தார். துண்டி மயானத்தில் இவரின் பூத உடல் தகனம் செய்யப்பட்டது. அஸ்தி அடங்கிய நினைவாலயம் மறுவன்புலோவில் அமைக்கப்பட்டுள்ளது. (28.03.1988) 12.08.1988 இல் ஆடி அமாவாசையன்று இராமேசுவரத்தில் அஸ்தி கரைக்கப்பட்டது. 16.02.1988 இல் பாலாவியில் அஸ்தி சங்கமமானது. சுவாமிகளின் குரு பூசை யாழ்ப்பாணத்தில் நடந்தது. இப்போ 1993 துவக்கம் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் தொடர்கிறது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னப்பன் எம் பிரான்
எல்லோர்க்கும் தானீசன்
என்றப்பன் எழில்வாதவூ
ரரென்றோ இசைத்ததனை
இன்றப்பன் இவனேதா
னென்னிறைவ னென்றென்றே
குப்றொப்ப நின்றானைக்
கருவாகக் கொண்டேனே.
- ஆழ்கடலான் முருகவே பரமநாதன்

சுவாமிகளின் வரலாறு கூறும் நூல்கள்:

திருவாசக சுவாமிகள் 28.03.1987
ஆழ்கடலான் ஈழநாட்டிலெழுதிய கட்டுரை
அன்பர்களின் கட்டுரைத் தொகுப்பு

எங்கள் குருநாதன் திருவாசகச் சுவாமிகள் 28.03.1994
- ஆழ்கடலான்

ஞானத் தந்தை : 28.03.1996
- ஆழ்கடலான்

சபாரத்தினம் என்னும் திருவாசகப் பேரூற்று 23.12.1998
- ஆழ்கடலான்

சுவாமி திருவாசகனாரின் திருவடிகளே தஞ்சம்

நன்றி

***ஈழத்துத் தபோதனர்கள்***
***ஆழ்கடலான் முருகவே. பரமநாதன்***
***பக் – 62–72***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WISHES FROM THE FORMER ASST. COMMISSIONER OF EXCISE MR.S.PUVENDRARAJAH

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" - திருக்குறள்

If you are born in the world, be born with qualities conductive to fame form those who a destitute of them it will be better not to be born – Thirukkura.

As an officer who has been Associating with Mr.Thambu Thurairajah in the Excise Department for about 37 years it gives a great pleasure in extending him my best wishes to a gentleman who has lived a life in accordance with the divine sayings of Thiruvasagam.

Mr.Thurairajah commenced his career in the Excise Department as an Excise guard in 1944, and though rank and file he exhibited his efficiency and was promoted to the rank of "Excise Corporal" in 1956. He has served in most of the excise stations, Distilleries and ware houses in the Island and in 1978 he was promoted to the rank of Excise Sergeant.

His best services in the Department was recognized and was awarded 40 commendations for his good work and conduct. And in addition he was warded three Gold badges for the exemplary services rendered by him and the special payment of an allowance attached to his ward. As an individual he possessed rare quality of life style of remaining as a complete teetotaler and non smoker, A special mention needs necessary of an opium(Drug) detection made by him with the assistance of the Grama Sevaka of the area when he was attached to Madampe Excise station during 1962 – 1964. The accused was charged at Chilaw Magistrate courts and was imposed a fine Mr.Thurairajah – Trained so may young officers in the department and his name remains warm in the minds of those officers serving in various ranks.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In his dedicated married life of more the 65 years he was gifted with the houses blessing men pronounce of the house wife excellent; the gain of blessed children in its goodly ornament. I accordance with the saying of the Thirukkural he was blessed with eight children out of which seven are living in foreign countries and the last daughters in an attorney at law practicing in Sri Lanka together with her husband who is also an attorney at law.

After retirement, Mr.Thurairajah engaged himself in Religious and Social Services and a remarkable land mark in the interest and contribution he made in the construction of "Sabaratnam Swamy Madam" at Thirukketheeswaram Temple – Manner.

Though he is 92 years of old he is very active in his activities and I wish and pray that he should live long and continue his dedicated services for many more years.

May god bless him and his family.

**S.PUVENDRARAJAH**
**Former Asst. Commissioner of Excise.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் கலாசார மண்டபத்தில் அறப்பணி நிகழ்வுகள் (2017/2018)

மண்ணில் நல்ல வண்ணம் வாழும் பேறு பெற்ற பெரியார், 16.09.2018இல் அகவை 95 அடியெடுத்து வைத்துள்ள கலாபூஷண தம்பு துரைராசா அவர்களைச் செயலாளராகவும் திருப்பணித் தவமணி சி.தியாகராசா(STR) அவர்களைத் தலைவராகவும் கொண்ட தொண்டர் சபையின் பரிபாலனத்தில் திருக்கேதீச்சரத்தில் 'ஸ்ரீ திருவாசக சுவாமி' என அழைக்கப்படும் சபாரத்தின சுவாமி பெயரால் மடம், கலாசார மண்டபம் நிறுவி சமய சமூகப்பணிகளை ஆற்றிவருகின்றனர். இப்பணிகளை முனைப்புடன் ஆர்வத்துடன் அனைவரும் நன்கறிந்த வகையில் பணிசெய்பவர் செயலாளர் நிர்வாகி கலாபூஷண' சைவநெறிச்செல்வர் தம்பு துரைராசா ஐயா ஆவார். தமிழ்கூறு நல்லுலகத்திற்கு அவரது செயலூக்கத்திறனை மெச்சி திருக்கேதீச்சர மடத்தினர் ஆற்றும் அண்மைக்காலச் சமய, சமூகப்பணிகளைக் கோடிட்டுக் காட்ட விழைகின்றோம். ஊக்கமிக்க தொண்டரை மேலும் ஊக்குவிக்க வேண்டும் என்று கருதியே இக்குறிப்புரை அமைகிறது.

திருக்கேதீச்சரம் கலாசார மண்டபத்தில் ஆன்மீகப் பெரியார்கள் 40 பேரின் திருவுருவப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சித்தர்கள், யோகிகள், ரிஷிகள், துறவிகள் கொலுவீற்றிருக்கின்றனர். இவர்களின் தரிசனம் பக்தி நலம் விளைவிப்பது செயலாளர் தம்பு துரைராசா தமது மனவிசாலித்த அறப்பணிச்சீலத்தால் தமது ஓய்வூதியத்திலிருந்து வறுமைக்கோட்டிற்குள் வாழும் வறிய குடும்பம் ஒன்றிற்குக் கிராம சேவகரின் சிபார்சின் பேரில் பாவிக்க உகந்த நிலையில் உள்ள தையல் இயந்திரம் ஒன்றையும் பிறிதொரு பாடசாலை மாணவிக்குக் கிராம அலுவலரின் சிபார்சின் பேரில் ரூ.18000/ பெறுமதியான புதிய துவிச்சக்கர வண்டியையும் உபகரித்து உதவியுள்ளார். பாடசாலை அதிபரின் சிபார்சில் ஐந்து சோடிப்பாதணிகளும் உபகரித்துள்ளார். மடத்தின் நுழைவாயிலினருகில் கால்நடைகள் தாகம் தீர்த்து நீர் குடிப்பதற்குத் தண்ணீர்த்தொட்டியொன்றும் அமைத்துள்ளார். இவரது நிர்வாக திறனால் மாதாந்தம் வரும் பூரணத் தினத்தில் அதிகாலை 5.00 மணி தொடக்கம் திருவாசக முற்றேதல் நிகழ்த்துவதுடன் பகல் 12.00 மணியளவில் அன்னதான நிகழ்வை நடாத்துவார். தமது முதிர்ச்சி உற்ற நிலையிலும் அதிகலை 4.00 மணிக்கே தமது துயில் நீத்துநேரம் தவறாமல் 5 மணிக்கெ திருவாசக முற்றோதலை ஆரம்பிப்பது குறித்து பலரும் இது ஒரு சாதனை என்று பாராட்டிப் போற்றுகின்றனர்.

செயற்றிறனும் பரோபகார நெஞ்சும் கொண்ட செயலாளரை வித்துவான் வசந்தா வைத்தியநாதன் திரு.ஐ.தி.சம்பந்தன். கலாபூஷணம் க.சோமசுந்தரம், சந்நதியான் ஆச்சிர மோகன் சுவாமிகள், நல்லையாதீன சுவாமிகள், கௌரவ முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கௌரவ அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் போன்றோர் வாழ்த்திப் பாராட்டி பணிகளை விதந்து குறிப்பிட்டு எழுதியுள்ளனர். 07.04.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் சைவம் போற்றும் குழுவினர் நல்லை ஆதீன முதல்வர் முன்னிலையில் இந்து கலாசார அமைச்சர் கௌரவ டி.எம்.சுவாமிநாதன் அவர்களால் 'சைவநெறிச்செல்வர்' விருது வழங்கப்பட்டது. 2014 இல் அகவை 90 விழாவில் அகில இலங்கை இந்துமாமான்றத்தினரால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். 23.01.2010 அன்று ஸ்ரீ சபாரத்தின ஸ்வாமிகள் குருபூசை, திருவாசக விழாவில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களால் திரு.தம்பு துரைராசா அவர்கள் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். ''பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள தனது இல்லத்திற்கு திருவாசகம் எனப் பெயரிட்டுள்ளார். இவர் பூசிப்பதும் வாசிப்பதும் நேசிப்பதும் ஏன் சுவாசிப்பதும் கூட திருவாசகம் தான் என்று பாராட்டியுள்ளார் வித்துவான் வசந்தா வைத்தியநாதன். மேலும் இவரது இல்லறவாழ்வில் அறுபதாண்டு விழா நூலிலே, 'தேனியின் முயற்சியும் எறும்பின் சுறுசுறுப்பும் இவரிடம் தோற்றுவிடும். காட்சிக்கு எளியவர். கருத்தில் வல்லவர். எடுத்த காரியத்தை இனினே முடிக்கும் தன்மை மிக்கவர். ''நலமே தழைக்க! என்றும் மொழிந்துள்ளார் புலவார்.

வை.க.சிற்றம்பலமும். முருக.வே.பரமநாதன் பேராசிரியர் வி.சிவகாமி ஆகியோரும் இவர் பற்றி எழுதியுள்ளார். கலாபூஷணம் தம்பு துரைராசா தம்பதியின் எழுபதாவது திருமண வாழ்வின் நினைவாக அரவது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் இணைந்து ஒரு அறையை அமைத்து கொடுத்துள்ளார். திருகேதீச்சரத்தில் பாசமும் நேசமும் மிகு தந்தையாகவும் மாமனாராகவும் அப்பப்பாவாகவும் தாத்தாவாகவும் பிறருக்கு முன்னுதாரண புருஷராக மதிக்கப்பட்டுச் சிறப்புகளால் கௌரவம் பெறுபவர் எமது மதிப்பார்ந்த செயலர் தம்பு துரைராசா அவர்கள். மக்களது அறப்பணி உணர்வும் மகிமை மிக்கது. கலாசார மண்டபத்துடன் இணைந்த அறைக்கு ரூபா 7 லட்சம் செலவானது. மகன் T.விஜயதரன் ரூபா 50000/= அறப்பணி, உடுப்புச்சலவை மெஷின் ஒன்று உபகரித்துள்ளானர். மருமக்கள் மாதாமாதம் பூரணை பூசைச்செலவுக்கு ரூபா10000/= தந்துதவுகிறார்கள். திருமதி வித்தியா நிதர்சனின் சிபார்சில் ஒவ்வொரு மாதமும் Dr.சுரேஷ்குமார் எமது HNB கணக்கிற்கு ரூபா 10000/= வைப்புசெய்துவருகிறார். மாணிக்கவாசக சுவாமிகளின் ஐம்பொன்சிலை அமைப்பிற்கு பண உதவியாக தலைவர் சி.தியாகராசா(STR) ஐயா ரூபா 45000/= உபகரித்தார்கள்.

இலவச மருத்துவ முகாம் ஒன்றை மடத்தில் 2018.04.22 அன்று ஏற்பாடு செய்து மூக்கு கண்ணாடி வழங்கல், நீரிழிவு நோய் சம்பந்தமான பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, மேலதிக மருத்துவ வசதிகள் என்பவற்றை லயன்ஸ் கழகத்தினது அனுசரணையுடன் நிகழ்த்துவித்தார். திரு.துரைராசா அவர்கள் அடம்பன் கிராம அலுவலர் 2018.08.27 திகதியிடப்பட்ட கடிதத்தில் ''நடக்க முடியாமல் கட்டிலில் படுத்த படுக்கையாக உள்ள இரண்டு நபர்களுக்கு கருணை கொண்டு அவர்கள் உலாவுவதற்கான சக்கரவண்டிகளை அன்பளிப்பாக வழங்கியமைக்காக எனது பிரிவு சார்ந்ததும் பிரதேச செயலகம் சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.'' என்று குறிப்பிட்டுள்ளமை செயலர் த.துரைராசா அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காருண்யமிக்க பாரபட்சமற்ற மனிதாபிமான உதவியை வெளிப்படுத்தியுள்ளது. ஐயாவின் பேருதவி கிடைக்கப் பெற்றவர்களது பெயர் இடம் என்பவற்றையும் அடம்பன் கிராம அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

1. அடம்பன் கவிசெல்வன் மகேஸ்வரி
2. வண்ணாகுளம் - பிசிறாடோ

நிர்வாக செயலர் தம்பு துரைராசா நிதிநிர்வாக நேர்மை மிக்கவர். எல்லாவற்றையும் ஒழுங்குடன் நிகழ்த்துபவர். மடத்தின் நிதி நிர்வாகத்தையும் நேர் சீராகவே பேணுவர். இதனால் திருக்கேதீச்சரம் ஆலயபரிபாலன சபையினர்.

அகில இலங்கை இந்து மன்றத்தினர்
இந்துசமய கலாசார அமைச்சு
வீரகேசரி பத்திரிகை நிறுவனம்
பிரதேச செயலக அதிகாரிகள்

கிராம சேவர் நல்லையாதீனம் சுவாமிகள், சந்நிதியான் சைவ கலை பண்பாட்டு பேரவையினர் ஆகியோர் இவரது சமய, சமூக பணிகளின் செயல் வேகத் திறனைப் பாராட்டி பிரச்சாரப்படுத்தி வாழ்த்தியுள்ளனர். இவரது தூயபணிகளுக்கு உறுதுணையானவர் இவரது அன்புமனைவி ஸ்ரீமதி இரத்தினேஸ்வரி அவர்கள்.

பணிகளைப் பராட்டுவதற்குரிய மனவளம் நம் எல்லோர்க்கும் வாய்க்க வேண்டும். பண்புடை மக்களது சீலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். அது செயல்வடிவமுற வேண்டும். எண்ணித் துணிய வேண்டுவதே நம் முன் உள்ளது. வாழும்போதே வாழ்த்துவோம்.

திருக்க்கேதீச்சரமும் திருவாசகமும் சைவத்தமிழர்களது இரு கண்கள் போன்றன. எனவே கலாசார மண்டபம்(மடம்) அங்கு அளப்பரிய அரிய பெரும் பணியாற்றி வருகிறது. மடத்தினது பரிபாலன செலவுகளும் காலாகாலம் உயர்ந்துசெல்கின்றன. இதனை நிர்வத்தி செய்து நமது சமயமும் பண்பாடும் பக்தியும் மேம்பட நாம் ஒவ்வொருவரும் மனம் வைத்து உறுதுணை புரிவோமாக. பாலாவியின் கரைமேல் உறையும் கௌரியம்பாள் உடனுறை திருக்கேதீச்சரப்பெருமானது திருவருள் அனைவர்க்கும் கிடைப்பதாக!

சுபம்

*அன்பன்*
*கனகசபாபதி நாகேஸ்வரன்*
*(செயற்குழு உறுப்பினர் தொண்டர் சபை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆன்மீக விழாவில் உரையாற்றிய விருந்தினர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஸ்ரீ சபாரத்தின் சுவாமிகள் - திருக்கேதீஸ்வரம்
2. சாயி பாபா - சீரடிசாயி
3. சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயானர், மாணிக்கவாசகர்
4. ஸ்ரீ புத்தர்பகவான்
5. ரமண மகாரிஷி
6. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் - நல்லூர்
7. கந்தையா சுவாமி(குடைச்சாமி) - கோண்டாவில்
8. காயத்திரிசித்தர் ஸ்ரீ முருகேசு மகரிஷி - நுவரெலியா
9. செல்லத்துரை சுவாமி - செங்கலடி
10. குருபாபா சுவாமிகள்
11. பொன்னுத்துரை சுவாமிகள் - இணுவில்
12. அருணாசலம் சுவாமிகள்
13. மகாதேவா சுவாமிகள்
14. மார்க்கண்டு சுவாமிகள் - கைதடி
15. சுவாமி வடிவேல் அம்மா
16. சடை அம்மா சுவாமிகள் - திருநெல்வேலி, கீரிமலை
17. சிவயோக சுவாமிகள் - கொழும்புத்துறை
18. செல்லப்பா சுவாமிகள் - நல்லூர்
19. முருகுப்பிள்ளை சுவாமிகள் சமாதி - மறவன்புலவு
20. வடிவேல்சுவாமிகள் - ஐயந்தி நகர், கிளிநொச்சி
21. தாளையன் சுவாமி - இரத்மலானை
22. சத்திரம் சுவாமிகள் - யாழ்ப்பாணம்
23. சுவாமி இராமகிருஷ்ணர்
24. சாரதா அம்மையார்
25. சுவாமி விவேகானந்தர்
26. கடையிற் சுவாமிகள் - யாழ்ப்பாணம்
27. மட்டுவில் சுவாமிகள்
28. நைனாதீவுச் சுவாமிகள் நைனாதீவு
29. கவிச்சக்கரவர்த்தி கம்பன்
30. தெய்வப் புலமைத் திருவள்ளுவர்
31. பாரதியார்
32. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்
33. சுவாமி கெங்காதரானந்தா - திருகோணமலை
34. மயில்வாகனம் சுவாமி - செல்வச்சந்நிதி
35. ஓம் ஸ்ரீ ஈஸ்வரபட் சுவாமி

**இவர்களுடைய படங்கள் திருக்கேதீஸ்வரம் கலாசார மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව

இந்து சமய, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்

**DEPARTMENT OF HINDU RELIGIOUS AND CULTURAL AFFAIRS**

—★—

ලියාපදිංචි කිරීමේ සහතික පත්‍රය

பதிவுச் சான்றிதழ்

**CERTIFICATE OF REGISTRATION**

තිරුවාසගම් ශ්‍රීමත් සබාරත්න ස්වාමි තොණ්ඩර් සබේ, චුන්ඩිකුලි, යාපනය.

*திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் - தொண்டர்சபை, யாழ்ப்பாணம்*

**Thiruvasagam Sri.Math Sabaratna Swami Volunteer Society, Chundikuli Jaffna**

ඉහත සඳහන් ආයතනය හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුවේ ලියාපදිංචි කර ඇති බැව් මෙයින් සහතික කරමි.

மேற்படி அமைப்பு இந்து சமய, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

This is to certify that above Institution has been registered in the Department of the Hindu Religious and Cultural Affairs.

ලියාපදිංචි අංකය
பதிவு இலக்கம்
Registration Number } HA/4/J/165

දිනය / திகதி / Date 22/11/91

අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director
க. சண்முகலிங்கம்

9වන මහල, / 9ம் மாடி, / 9th Floor,
රක්ෂණ මන්දිරය / இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் / Sri Lanka Insurance Corporation,
21, වොක්සෝල් පාර, / 21, வெக்ஷோல் வீதி, / 21, Vauxhall Street,
කොළඹ-2. / கொழும்பு 2. / Colombo-2

**சபையின் மேம்பாட்டிற்கான சமய, சமூக, சமுதாயப் பணிகள்**

**தொடர்ந்து செய்வதற்கு விரும்புபவர்கள் உதவியை**

| சபை கணக்கு இலக்கம் | பெயர் | வங்கி |
|---|---|---|
| **0390200550869** | **MS SABAI.T.S.S.T** | H.N.B |

**த.துரைராசா(செயலாளர்)**

**இல.31A, ஜானகி ஒழுங்கை, பம்பலப்பிட்டி, கொழும்பு - 04**

என்ற முகவரிக்கு அனுப்பினால் பற்றுச் சீட்டு அனுப்பிவைக்கப்படும்

Tel : 0114852232



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதியோர்கள் பராமரிப்பு

**தாதியர்களின் சேவையுடன் சகல வசதிகளுடன்**
**பாராமரிக்கப்படுவார்கள்**

# திருவாசகம்

**இல.89, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.**
Tel : 021 4355082, 0765546655

## ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாசார மண்டபம்

**யாத்திரியர்கள் தங்க குளியலறையுடன் சேர்ந்த அறைகளும்,**
**மங்கள நிகழ்வுகள் நடாத்த உகந்த மண்டபமும் அமைந்துள்ளது.**

கௌரி அம்மன் வீதி,
திருக்கேதீஸ்வரம், மன்னார்.
தொ.பே : 023 7900002

த.துரைராஜா
இல.31A, ஜானகி லேன், கொழும்பு - 04
தொ.பே : 011 4852232

## Srimath Sabaratnam Swamigal Hindu cultural Hall

*Room with Attached Bathroom and Cultural Hall Available for pilgrims*
*to stay and to have Festivals and cultural events.*

Srimath Sabaratnam Swamigal
Hindu Cultural Hall
Gowri Amman Road, Thiruketheeswaram,
Manner. Tel : 237900002

T.Thurairajah
No.31A, Janaki Lane,
Colombo - 04
Tel : 011 4852232



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சரம் "திருவாசகம்" ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் குருபூசையும் திருவடி வழிபாடும்

காலம் : 25.01.2019 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி
26.01.2019 சனிக்கிழமை காலை 9.00 மணி

இடம் : திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையினரின் இந்துக் கலாச்சார நிலையம், திருக்கேதீச்சரம்

தலைமை : ''திருப்பணித்தவமணி'' திரு.சி.தியாகராசா (STR) அவர்கள்

**முதல்நாள் நிகழ்வுகள் - (25.01.2019 வெள்ளி மாலை 5.00 மணி)**

- நந்திக்கொடியேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- திருவடி வழிபாடு, தீபாராதனை
- நிறைவு

**இரண்டாம் நாள் நிகழ்வுகள் (25.01.2019 சனி காலை 9.00 மணி)**

**பிரதம விருந்தினர்**
நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

**கௌரவ விருந்தினர்**
வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன் அவர்கள்
(தலைவர். இந்து ஆலயங்களின் ஒன்றியம், மன்னார்)

**சிறப்பு விருந்தினர்**
''விடைக்கொடிச் செல்வர்'' திரு.சி.தனபாலா அவர்கள்
(தலைவர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, கொழும்பு)

''அமுதவாரிதி'' திரு.செ.மோகனதாஸ் அவர்கள்
(சந்நிதியான் ஆச்சிரமம்)

- நந்திக் கொடியேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- ஆசியுரை - சுவாமி சிதாகாசானந்தா அவர்கள், சின்மயா மிஷன்
- தலைமையுரை
- சிறப்பு சொற்பொழிவு - திரு.நி.பாபுதரன்(ஆசிரியர்)
- நூல் வெளியீட்டுரை - திருமதி பவானி முகுந்தன்
- நூல் வெளியீடு - ''திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் தொண்டர் சபையின் தொடர் பணிகள்''
- பிரதம விருந்தினர் உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- நன்றியுரை
- திருவமுது சேவை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**''கலாபூஷணம்'' தம்பு துரைராசா**
**செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**OSAI Digital**
for all your designing & printing needs
473,1/1A, Galle Road,Colombo 00600 | +94 77 5433356 | osaidigital@gmail.com | www.osaidigital.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org